1979 ஏப்ரல் 26]

[முற்பகல் 9-10]

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, சோழர் காலத்தைப் பற்றிய.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சோழர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு குறிப்பிட்ட கோவிலைப் பற்றியது. மன்னார் குடியைச் சேர்ந்தது அல்ல. உட்காருங்கள்.

தமிழக சுற்றுலா மையங்கள் குறித்து விளம்பரம்

*வினா எண் 829 — திரு. என். லட்சுமிநாராயணன் : மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் வெளிநாட்டுப்பயணிகளை கவரத்தக்க வகையில் தமிழக சுற்றுலா மையங்களைப்பற்றி என்னென்ன வழிகளில் வெளிநாடுகளில் பிரச்சாரமும் விளம்பரமும் செய்யப் பட்டுள்ளன?

(ஆ) அத்தகைய விளம்பரங்களால் எந்த அளவிற்குத் தமிழகத்தில் வெளிநாட்டுப் பயணிகளின் வருகை அதிகரித் துள்ளது?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) 1978-79-ல் சுற்றுலாப் பயணிகளை கவரத்தக்க வகையில் தமிழ்நாடு சுற்றுலா மையங்களைப் பற்றி பலவண்ணச் சிறப்பு வெளியீடு ஒன்றும், பலவண்ண சுவரொட்டிகள் 8 வகைகளும் வெளியிடப்பட்டது. அவைகள் வெளிநாடுகளுக்கு அனுப் பப்பட்டன. இது தவிர வெளிநாட்டு செய்தித்தாள்களில் விளம் பரமும் கொடுக்கப்பட்டது. தமிழகம் வந்த வெளிநாட்டுப் பயண முகவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் தக்க முறையில் வரவேற்று உபசரித்து அனுப்பப்பட்டனர்.

(ஆ) இத்தகைய விளம்பரங்களாலும் இந்திய அரசு மேற் கொள்ளும் முயற்சிகளாலும் சென்னை மாநகரிலுள்ள ஓட்டல்கள் பயணமுகவர்கள் ஆகியோர் மேற்கொள்ளும் முயற்சிகளாலும் தமிழகம் வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனலாம். 1978 ஆம் ஆண்டில் 1977 ஆம் ஆண்டைவிட சுமார் 36,725 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் தமிழகம் வந்துள்ளனர்.

[1979 ஏப்ரல் 26

திரு. என். லட்சுமிநாராயணன் : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பயணிகளுக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள சுற்றுலா மையங்களைப் பற்றி இந்திய சுற்றுலாத் துறையின் மூலமாக தரப்படும் விளம்பர வரைபடங் களில் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா மையங்கள் விளம்பரம் செய்யப்படாமல் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தக் குறையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. ஐசரி வேலன் : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் குறையை இந்த அரசு அவசியம் பரிசீலித்து, அதைத் தீர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. பொ. தங்கவேலு கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, ராஜா தேசிங்கு ஆண்ட இடம் செஞ்சி. அந்த செஞ்சியில் கோட்டைகள் இருக்கின்றன. வெளிநாட்டினரும் வெளி மாநிலத்தில் இருந்தும் அந்தக் கோட்டையைப் பார்க்க பலர் வருகிறார்கள். ஆகவே, அதை சுற்றுலா மாளிகையாக அமைக்கப்படுமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்பு கோவை மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளை ஆகர்ஷிப்ப தற்காக என்னென்ன முறையில் விளம்பரம் செய்யவேண்டும், எந்தெந்த இடங்களை எல்லாம் சுற்றுலா இடங்களாக அந்த மாவட்டத்தில் மாற்றப்படவேண்டும் என்று திட்டக்குழுவின் துணைத் தலைவர் தலைமை தாங்கி நடைபெற்ற கூட்டத்தில் நாங் கள் எல்லாம் கலந்து கொண்டு முடிவு எடுத்து அரசுக்கு அனுப்பி இருந்தோம். அந்த முடிவுகள் அரசுக்கு வந்து சேர்ந்ததா? அது பற்றி என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுக்க இருக்கின்றது? என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, அது பற்றி தனிக் கேள்வி போடவும்.